1987 ஏப்ரல் 20]

தக்கலை மின் கோட்டத்தைப் பிரித்தல்.

416—(வினா எண். 7358) திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தக்கலை மின் கோட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை. ஆனால், குழித்துறையை தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய கூடுதல் பங்கிடு கோட்டம், கன்னியாகுமரி மின் அமைப்பில் தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்கலைமின் கோட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்ட நேரத்திலே, அங்கே அதிகாரிகளைப் போட்டு ஒரு உட்கோட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்களேயல் லாமல், ஒரு சப்-ஸ்டேசன் ஆரம்பிக்கப்படவில்லை. விளவங் கோடு தொகுதியிலே ஒரு சப்-ஸ்டேசன் ஆரம்பிக்கவேண்டும் என்று பல ஆண்டுக்காலமாக ஒரு முடிவு எடுத்து, ஆரம்பிக்கும் உத்தேசம் இருப்பதாக சொன்னார்கள். ஆனால் பல ஆண்டுக் காலம் கடந்தோடியும் இதுவரையில் அதை ஆரம்பிப்பதற்கான ஆக்கப்பூர்வமான வேலைகள் நடைபெறவில்லை. அதாவது மருதங்கோடு என்ற பகுதியில் ஒரு சப்-ஸ்டேசன் ஆரம்பிப்பதற் கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே இந்த ஆண்டாவது உடனடியாக ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே நாகர்கோவில் மற்றும் தக்கலை ஆகிய இரண்டு இடங் களில் 2 கோட்டங்கள் இருந்தன. அதை மூன்றாவது கோட்ட மாக ஏற்படுத்துவதற்கு, தக்கலையிலிருந்து ஒரு சப்-ஸ்டேசன் அதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறது. அவ்வளவுதானே தவிர, அந்த சப்-ஸ்டேசனுடைய அலுவலகம் அங்கேதான் இருக்கிறது. மூன்றாவதாக ஒரு சப்-ஸ்டேசன் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.